**MCOP NO. 29 /2022**

**Date 16.03.2026**

**Pw1 சுரேஷ்**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சி**

**மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.14** ஆகும். **மனுதாரரின் இயலாமமை சான்று நீதிமன்ற சான்றாவணம் 1** ஆகும்.

**2ம் எதிர் மனுதாரரின் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த போது நான் வாகனத்தை ஓட்டவில்லை என்றால் சரிதான். நான் பயணம் செய்ததாக சொல்லக்கூடிய வாகனம் கண்டைனர் லாரி என்றால் சரிதான். அதன் பின்பகுதியிள் உள்ள டிரைலரை கழற்றி விட்டு இன்ஜின் மட்டும் செல்லும் போது தான் விபத்து ஏற்பட்டது. நான் பிரயாணம் செய்ததாக சொல்லப்படும் வாகனத்திற்கு 18 சக்கரங்கள் உள்ளன. இது போன்ற அதிக எடை கொண்ட வாகனத்திற்கு சிறப்பு ஓட்டுநர் உரிமம் தேவை என்றால் சரியல்ல. நான் மனுவில் சொல்லியுள்ளது போல் கிளினராகவோ, ஓட்டுநராகவோ செயல்படவில்லை என்றாலும், நான் பிரயாணம் செய்த வாகனத்தை ஓட்டுவதற்கு எனக்கு எந்த ஓட்டுநர் உரிமமும் இல்லை என்றாலும் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.